**அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் -2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்.

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிய மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோஷலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவாகத் தரப்பினர்களின் பொறுப்பு.

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு.**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்தில் உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டு கூட்டுத்தாபனத்தினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க கூட்டுத்தாபனம் செயற்பட்டுள்ளதாக,

- வளங்களை சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்.

### 1.5.1 நிதிக்கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு.

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை பணியகத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்.

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 31 மற்றும் 51 ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கையிடும் திகதியில் சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் நிருபணமாகும் வகையில் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்படு காலம் குறைந்தது ஒவ்வொரு ஆண்டிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டும். எனினும் 1968 ஆம் ஆண்டு முதல் அரச மரக் கூட்டுத்தாபனதிற்கு கையேற்கப்பட்ட ரூபா 91,657,617 என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள காணிகளின் தற்போதய பெறுமதி மற்றும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வரும் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த ரூபா 844,535,194 பெறுமதியான ஆதனங்கள் பொறிகள் மற்றும் | கட்டிடங்கள் மற்றும் காணி மீள்மதிப்பீட்டிற்காக அரச விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் இணக்கப்பாடு மற்றம் அறவிடப்படுகின்ற கட்டணங்கள் தொடர்பாக கிடைத்துள்ள பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பேரில் எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக. | நியமத்தின் பிரகாரம் முழுமையாக பெறுமான தேய்வு செய்யப்பட்டுள்ள ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களில் பயன்படு ஆயுட்காலத்தை மீண்டும் மதிப்பீடு செய்வதற்கும் காணியை மீள் மதிப்பீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்களின் செயற்திறனான பயன்படு காலத்தை மீள்மதிப்பீடு செய்வதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | அட்டுறு எண்ணக்கரு மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் 18 இன் 09 ஆம் பந்தியின் பிரகாரம் கிடைத்த அல்லது பெறவேண்டிய நியாயமான பெறுமதியை கருத்திற் கொண்டு வருமான அளவிடல் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் 2022 ஏபரல் 22 ஆந் திகதி பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் கட்டளை மற்றும் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் ஹல்மில்லவ, தேக்கு வேலைத்தளங்களில் இடம்பெற்றிருந்த ரூபா 2,994,536 ஆன நட்டத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு வழங்கப்பட்ட கட்டளையின் படி ஒருவரிடமிருந்து மாத்திரம் அறவிடப்பட்டிருந்த ரூபா 299,453 தொகை தவிர எஞ்சிய ரூபா 2,695,083 ஆன பெறுமதி மீளாய்வாண்டில் பெறவேண்டிய வருமானமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அப்பெறுமதியிலிருந்து மீளாய்வாண்டின் வருமானம்மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் குறைறவாக கணிக்கப்பட்டிருந்ததுஈ ʼபயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது. | மேலும் அறவிடுவதற்குரிய தொகை கொடுப்பனவு தொடர்பாக காணப்படும் நிச்சயமற்ற தன்மை அடிப்படையில் 2022 ஆம் ஆண்டில் கணக்கில் சீராக்கம் செய்யப்பட வில்லை இதுவரை செலுத்தப்பட்டுள்ள பணத்தை 2023 ஆம் ஆண்டில் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | அறவிடப்பட வேண்டிய கட்டணங்களாக இருப்பதால் பெற வேண்டிய வருமானமாக கணக்கீடு செய்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கூட்டுத்தாபனத்துக்கு எதிராக தொடரப்பட்டுள்ள ரூபா 2,008,710 இழப்பீடு பெறுமதியான 03 வழக்குகளும் இழப்பீட்டுப் பெறுமதி இனங்காணப்படாத 04 வழக்குகள் கூட்டுத்தாபனத்தினால் தொடரப்பட்டுள்ள வழக்கு என்ற வகையில் சரியான முறையில் அல்லாது நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 37 இன் 28 மற்றும் 34 ஆம் பந்திகளின் பிரகாரம் நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள் என்பவற்றை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | இதனை எதிர்வரும் காலங்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். | காணப்படும் வழக்கு தொடர்பில் சரியான வகையில் வெளிப் படுத்துவதற்கும் நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள் இனங் காணப்பட்டு நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் 09 ஆம் பந்தியின் பிரகாரம் இறுதி இருப்பு கிரயம் அல்லது தேதிய நிகர பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 02 பிரதேச அலுவலகங்களில் ஏல விற்பனைக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 11,244,320 | யாழ்ப்பான பிரதேசத்தின் இருப்புக்களில் கிரயம் ரூபா 8,161,246 மற்றும் தேறிய நிகர பெறுமதி ரூபா 6,730,021 தொகையும் பூஸ்ஸ பிரதேசத்தில் இருப்புக்களின் கிரயம் | இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் இறுதி இருப்பு கிரயம் அல்லது தேதிய நிகர பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த |

| | | | |
|---|---|---|---|
| | தேறிய நிகர பெறுமதியான மரக் குற்றிகள் மற்றும் கிழிக்கப்பட்ட மரங்கள் அவற்றின் கிரயப் பெறுமதியான ரூபா 12,951,479 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுகளில் இலாபம் மற்றும் இருப்பின் பெறுமதி ரூபா 1,707,159 வீதம் கூடுதலாக காண்பிக்கப்பட்டு இருந்தது. | ரூபா 4,790,233 தொகையும் தேறிய நிகர பெறுமதி ரூபா 4,514,299 ஆகும். | பெறுமதியில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | 09 பிரதேச அலுவலகங்களின் ரூபா 303,526,109 கிரயத்திலான இருப்பின் தேதிய நிகர பெருமதி ரூபா 259,462,014 ஆக இருந்தமையால் இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம் குறைவான ரூபா 44,064,096 பெறுமதி செலவினத்தின் கீழும் ரூபா 303,526,109 ஆன கிரயம் விற்பனை கிரயத்தின் கீழும் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் தேறிய கிரய பெறுமதியான ரூபா 259,462,014 தொயையான விற்பனை கிரயத்திற்கு சீராக்கப்பட்டமையால் ரூபா 44,064,096 வீதம் மொத்த இலாபம் மற்றும் ஏனைய செலவினங்கள் குறைத்து நிருபணமாக்கப்பட்டிருந்தது. | மொத்த இலாபத்திற்கு ஏற்படுத்தும் தாக்கம் அடுத்த கணக்குகளில் சீராக்குவதாக நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். | தேறிய நிகர பெறுமதி கிரயத்தை விட குறைந்ததாக இருக்கும் போது நியமத்தில் குறிப்பிடப்பட்ட வகையில் கணக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்.

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தின் இருப்பு மறு மதிப்பீடு செய்யும் கொள்கை முதலாவது பெறுகை முதலாவது வழங்குவது (FIFO) முறையாக இருந்த போதும் கிழிக்கப்பட்ட மரக் களஞ்சியங்களில் மிகவும் பழமையான பலகைகள் காணப்பட்டன அவ்வாறு காணப்பட்ட பழைய மரப்பலகைகள் கால பகுப்பாய்வு ஒன்று செய்யப்பட்டு அதற்குரிய விலைகளின் பிரகாரம் இருப்புப் பெறுமதி மறு கணிப்பிட வேண்டிய போதிலும் சில மர இருப்புகள் 2022 ஆம் ஆண்டில் கிழிக்கப்பட்ட மரங்களுக்குரிய கணக்கிடப்பட்ட விலைகளின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தமையால் மீளாயவாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுகளில் காணப்படும் கிழிக்கப்பட்ட மரப்பலகை மர இருப்பு சரியானது என உறுதிப்படுத்த முடியாது. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தின் இருப்பு மறு மதிப்பீடு செய்யும் கொள்கை முதலாவது வந்தது முதலாவது வழங்குவது (FIFO) முறையாக இருப்பதால் காணப்படும் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்டு அதற்குரிய விலைகளின் பிரகாரம் இருப்பு மறு கணிப்பீடு செய்யப்பட்டு சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேவண்டியதுடன் (FIFO) முறை அடிப்படையில் இருப்பு விநியோகிக்கப்படல் வேண்டும். |

### 1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஜூலை 31 உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட விசேட இருப்பு கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் கல்தெமுள்ள தளபாட தொகுதியின் கிரயம் ரூபா 2,622,900 ஆன நிராகரிக்கப்பட்ட சிலீப்பர் கட்டைகள், மின் கம்பங்கள் மற்றும் வேலிக்கம்பங்கள் போன்ற 757 அலகுகள் களஞ்சிய இருப்பாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிராகரிக்கப்பட்ட ஸ்லீப்பர்கள் அவற்றின் நிலைக்கு ஏற்ப A, B, C என தரம் பிரிக்கப்பட்டு, ஏலப் இருப்புக்கள் தயாரிக்கப்பட்டு விற்கப்படுகின்றன. தரம் குறைந்த யானை வேலி கம்பங்கள், மின்கம்பங்கள் போன்றவற்றுக்கு வழங்குனர்களுக்கு சம்பளம் வழங்கப்படாமல், விறகாக விற்கப்படுகிறது. | அரசு காடுகளில் இருந்து தயாரிக்கப்படும் இந்த ஸ்லீப்பர்கள், மின்கம்பங்கள் மற்றும் வேலி கம்பங்கள் தரமான உற்பத்தியாக இருப்பதால் உற்பத்திக்காக செலவிடப்பட்ட கிரயம் ஏற்படுவதால் அவற்றை இறுதி இருப்பில் சேர்த்த பிறகு கணக்கில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் கெப்பட்டிபொல களஞ்சியத்துக்குரிய கிழிக்கப்பட்ட மரங்கள் ஏல விற்பனை இருப்பு கணிப்பீடு செய்யும் போது 2022 ஆம் ஆண்டுக்குரிய 73 லொட்களில் காணப்பட்ட 40,068 கன தெசி மீற்றர் ஆன இருப்பு 2021 ஆம் ஆண்டின் அலகு விலையின் பிரகாரம் மீள் கணிப்பீடு செய்தமையால் இறுதி இருப்பு ரூபா 1,501,748 குறைத்தும் 2021 ஆம் ஆண்டிற்குறிய 1,275 கன தேசி மீட்டர் ஆன 02 தொகுதிகள் 2022 ஆம் ஆண்டு அலகொன்றின் விலை பிரகாரம் மீள் மதிப்பீடு செய்யப்பட்டமையால் இறுதி இருப்பின் பெறுமதி ரூபா 47,787 கூடுதலாகவும் காண்பிக்கப் பட்டமையால் கெப்பட்டிபொல களஞ்சியத்தின் மொத்த ஏல விற்பனை இருப்பு ரூபா 1,453,961 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கெப்பட்டிபொல களஞ்சியத்துக்குரிய கிழிக்கப்பட்ட 73 லொட் கிழிக்கப்பட்ட மரங்கள் 2022 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்ட போதும் அதிகளவிலான பலகைகள் 2021 ஆம் ஆண்டில் அரியப்பட்டவையாகும். 2021 ஆம் ஆண்டுக்குரிய 2 லொட் ஏலவிற்பனை தவறுதலாக 2022 ஆம் ஆண்டின் விகிதத்தின் பிரகாரம் ரூபா 47,787 கூடுதலாக மீள் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தன. | அனைத்து பலகைகளின் காலத்தை சரியாக இனங்கண்டு குறித்த ஆண்டின் விகிதங்களைப் பயன்படுத்தி இருப்புக்களை மீள் கணிப்பீடுசெய்து சரியான பெறுமதியை கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | அம்பாறை தளபாட உற்பத்தி தொழிற்சாலையில் 2009 ஆம் ஆண்டு முதல் காணப்படும் 148,178 கன டெசி மீட்டர் வன குற்ற மரக்குற்றிகள் தொடர்பாக | இந்தக் குற்றவியல் மரக்கட்டைகள் தொடர்பாக பிரதி பொது முகாமையாளர் (இயக்கம்) வழங்கிய சுற்றறிக்கையின் பிரகாரம் | வனக் குற்றங்கள் தொடர்பான நடவடிக்கைகள் முடிக்கப்பட்டுள்ளதா என்பதைக் |

| | | |
|---|---|---|
| காணப்படும் வழக்கு நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளதா என ஆராய்ந்து பார்த்து அந்த இருப்புக்களை புத்தகங்களில் உள்ளடக்கி கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் எடுத்து வழக்கு நடவடிக்கைகள் முடிந்தால் விரைவில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | கண்டறிந்து, அதற்குரிய மரக் குற்றி களைள இருப்பு புத்தகங்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.5 அதிகாரம் பெறப்படாத கொடுக்கல் வாங்கல்கள்.**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

| அதிகாரம் பெறப்படாத கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட நாட்குறிப்பு உறுதி சீட்டுக்கள் இல்லாமல் ஊழியர் கடன் வட்டியாக ரூபா 11,072,773 தொகை நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புகளில் இருந்து ஊழியர் கடன் சுழற்சி நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | அங்கீகரிக்கப்பட்ட நாட்குறிப்பு பதிவுகள் மூலம் குறித்த மாற்றல் குறிப்புக்களை இடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.6 அங்கீகாரமற்ற மீளாய்வு அல்லது மதிப்பீடு செய்தல்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வன பாதுகாப்பு திணைக்களத்திடம் இருந்து மதிப்பீட்டின் பிரகாரம் முல்லைத்தீவு முரிப்பு வேலைத்தளத்தில் மொத்த மர விளைச்சல் 1,550 கன மீற்றராக இருந்த போதும் கூட்டுத்தாபனம் அதை 700 கன மீட்டராக 850 கன மீட்டர் அதாவது 54.84 சதவீதம் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது மேலும் வேலைத்தளத்தில் C பகுதியில் உள்ளவாறு உள்ளவாறான விளைச்சல் வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் மதிப்பீட்டுடன் ஒப்பிடும்போது 13,662 மீற்றர் நீளம் அதாவது 64% சதவீதமான அசாதாரணமான குறைவான பெறுமதி ஒன்றாக அவதானிக்கப்பட்டது. | மரங்களின் பௌதீக நிலைமைகளுக்கு ஏற்றதாக 700 $m^3$ விளைச்சல் மதிப்பிடப்பட்டுள்ளது. வனப் பாதுகாப்புத் திணைக்களம் வேலைத்தளத்தை ஒதுக்கும் நேரத்தில், மரங்களின் சுற்றுப்பட்டை அளவு கொடுக்கப்பட்டு, வேலைத் தளம் முடிந்ததும் அரசிறை பின்னம் கணக்கிடப்படும் நேரத்தில், மாதிரிகளின் அளவீடுகள் எடுக்கப்பட்டு அளவு மதிப்பீடு செய்யப்படுகிறது. முழு காடுகளையும் மாற்றுவதன் மூலம் வழங்கப்பட்டது. இந்த தளத்தில் இரண்டு நிறுவனங்களுக்கு இடையே பரிமானத்தில் உள்ள பெரிய அளவிலான விலகலை சரிசெய்ய வனப் பாதுகாப்பு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வனப் பாதுகாப்பு திணைக்களத்தினால் பரிமாண மதிப்பீட்டிற்குரிய உள்ள உதவிப் பிரதேச முகாமையாளர் அலுவலகத்திற்கு வேலைத்தளத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் கிடைத்துள்ளதால் அது தொடர்பாக முறையான கவனமொன்றும் மேற்பார்வையுடனும் நடவடிக்கை எடுத்து சரியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முழுமையாக வெட்டப்படும் வேலைத்தளத்தில் நிலத்தை வகைப்படுத்துவதற்காக கூட்டுத்தாபனத்தினால் 15 பொது நியதிகள் உள்ளடக்கப்பட்டு ஒவ்வொரு வேலைத் தளத்திற்கும் ஒன்றாக மாதிரி ஆக்குவதற்கும் முடியாத நடைமுறை சாத்தியமற்ற நடைமுறை ஒன்று பின்பற்றப்பட்டு இருந்ததுடன் முல்லைத்தீவு முரிப்பு தேக்கு முழுமையாக வெட்டுதல் வேலைத்த ளத்திலும் அதே மாதிரிபடுத்தல் மூலமாக தவறான பூமி வகைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது அதன் காரணமாக மரக்குற்றி ஆக்குவதற்காக ஒப்பந்தகாரர்களுக்கு கூடிய விலை ஒன்று கொடுப்பனவு செய்து இருந்ததுடன் உத்தியோகத்தர்கள் முறையான கவனத்துடன் கடமையை நிறைவேற்றாமை காரணமாக கிரயம் அதிகரித்து கூட்டுத்தாபனத்திற்கு நட்டம் ஏற்படுவதாக அவதானிக்கப்பட்டது. | 15 பொதுவான அளவுகோல்கள் எந்தவொரு உறுதியான பணியிடத்தையும் துல்லியமாக வகைப்படுத்தும் திறன் கொண்டவை. சில உருப்படிகள் சாதாரண பணியிடமாக வகைப்படுத்தப்படுகின்றன, மற்ற பொருட்கள் கஷ்டமாக.்.மிகவும் கஷ்டமாக இருக்கலாம். ஆனால் பாரம்பரிய ரீதியாகப பொறுத்த வரையில், இந்தப் பணிப் பகுதிக்குக் கிடைத்த புள்ளிகளின்படி, இது மிகவும் கடினமான வரம்பை மீறும் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது. | அறிமுகப்படுத்தப்பட்ட அளவுகோல்களை மாற்றியமைக்கும் முறையின் மூலம் ஒரு முழுமையான அகற்றல் தளம் நியாயமான வகைப்பாட்டைப் பெறும் என்பதை உறுதிப்படுத்த முடியாது என்பதால், தற்போதுள்ள அமைப்பினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.7 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | தொகை ரூபா | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | வாகனத் திருத்தச் செலவினம். | 63,777,998 | வாகனங்களின் விபரங்கள், இணைக்கப்பட்ட அலுவலகம், திருத்தங்களிற்கான காரணம், தன்மை, செலவினம் மற்றும் மேற்கொண்ட நிறுவனம். | இத்தகவல்களை பிராந்திய ரீதியாக பெற்றுக்கொண்டு விரைவில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை சிலிப்பர் உற்பத்தி மற்றம் விற்பனை. | 32,346,175 | உற்பத்தி அளவு கட்ளையிடப்பட்ட அளவு, பூர்த்தி செய்யப்பட்ட அளவு மற்றும் பெறவேண்டி தொகை. | இத்தகவல்களை பிராந்திய ரீதியாக பெற்றுக்கொண்டு விரைவில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்.

### 1.6.1 பெறவேண்டிய பணம்.

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட பலகைகள் மற்றும் பலகைகளுடன் அண்மித்த தளவாடங்களுக்காக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 908.87 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் 01 இற்கும் 03 ஆண்டுகளுக்கும் இடைப்பட்டிருந்த நிலுவையான கடன் ரூபா 430.86 மில்லியனும் 04 ஆண்டுகளுக்கும் அதற்கு மேற்பட்ட கடன் ரூபா 59.85 மில்லியன் ஆக இருந்தது. கடன் தொகை கொடுப்பனவு செய்யாத 24 நிறுவனங்களுக்கு மீண்டும் மீண்டும் கடன் கடனுக்கு பொருட்களை விற்பனை செய்த காரணத்தினால் அந் நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 770,799,748 ஆக இருந்ததுடன் அரசு நிறுவனங்களுடன் உடன்படிக்கை செய்யாமையால் 10 சதவீத தாமத கட்டணத்தை அறவிட முடியாமை, முறையான ஆவணங்களை பராமரித்து மாதாந்த விற்பனை மற்றும் அறவீடுகளின் செயன் முன்னேற்ற அறிக்கை இல்லாமை கணனி முறைமை நாளதுவரையாக செல்லப்படாமை போன்ற கடன் அறவீடு தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | எமது பிரதான கொள்வனவாளர்களான இலங்கை புகையிரத திணைக்களத்திடமிருந்து சிலீப்பர்களுக்கான ரூபா 603 மில்லியனும் மின்சார சபையிடமிருந்து ரூபா 55 மில்லியனும் தவணை முறையில் சேகரிக்கப்பட்டு பொருட்கள் வழங்கல் இடம் பெற்றிருந்ததுடன் 06 அரச நிறுவனங்கள் தற்போது பகுதி பகுதியாக செலுத்தி வருகின்றன. | கடன் விற்பனை மற்றும் சேகரிப்பு நடவடிக்கைகள் தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகள் நாளது வரையாக்கப்படவேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை. | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | i. நி.பி 110. | கூட்டுதாபனத்தில் நட்டங்கள் சேதங்கள் தொடர்பான பதிவேடு நாளாது வரையாக பேணப்பட்டு இருக்கவில்லை. | அடுத்த ஆண்டின் போது சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | ii. நி.பி 1646. | 39 வாகனங்களுக்குரிய 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்குரிய நாளாந்த ஓட்டக் குறிப்புகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அந்த ஓட்டக் குறிப்புக் கோவைகளை சமர்ப்பிப்பதற்கு இயலுமை காணப்படுகின்றது. | பிரமாணங்களின் பிரகாரம் நாளாந்த ஓட்டப்பதிவு குறிப்புக்களையும் மாதாந்த பொழிப்பினையும் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.6 ஆம் பந்தி. | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய வரைவு ஆண்டறிக்கை 2023 யூலை 10 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் வரைவு ஆண்டறிக்கையை விரைவில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வரைவு ஆண்டறிக்கை நிதிக் கூற்றுக்களுடன் 60 நாட்களுக்குள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 பொது நிர்வாக சுற்றறிக்கை. | கூட்டுத்தாபனத்தின் வாகனங்களில் அரச இலட்சிணை பொறிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச இலட்சிணையைப் பொறிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அரச வாகனங்களில் அரச இலட்சிணையை பொறித்தல் கட்டாய மாக்கப்பட்டுள்தால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2015 மே 25 ஆந் திகதிய PED 1/ 2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை. | | | |
| | i. 3.1, 3.2.1 மற்றும் 3.2.2 ஆம் பந்திகள். | உத்தியோபூர்வ வாகனங்களுக்கு உரித்தான உத்தியோகத்தர்களின் மாதாந்த எரிபொருள் அளவு படியாக வழங்கப்பட வேண்டிய போதிலும் மாதாந்த மீள்நிரப்பல் அடிப்படையில் கட்டுநிதி யொன்றாக எரிபொருள் படிகள் வழங்கப்பட்டிருந்த | இதில் குறிப்பிட்ட விடயங்களை எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடைமுறையொன்று தயாரித்து வருவதாக அறிய தருகின்றேன். | உரிய உத்தியோகத்தர்களுக்கு உரித்தான மாதாந்த எரிபொருள் அளவு படியாக வழங்கப்பட வேண்டியதுடன் நிர்ணயிக்கப்பட்ட அளவினை மிகைத்திருந்தால் அறவிடுவதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | துடன் அக்கட்டுநிதி போதுமாக இல்லாத சந்தர்ப்பங்களில் முற்பணம் பெற்றுக் கொள்ளப்பட்டு பின்னர் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது இதற்குரிய அநேகமான பிரயாணங்கள் தனிப்பட்டதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | ii 3.1 ஆம் பந்தி. | கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு மாதாந்தம் பயன்படுத்தக்கூடிய எரிபொருள் அளவு 170 லீட்டராக இருந்த போதிலும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முன்னால் தலைவரால் 3 வாகனங்களைப் பயன்படுத்தி மாதம் ஒன்றிற்கு உரித்தான 170 லீட்டர் எரிபொருளை விட 705 லீட்டர் கூடுதலாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | அதன் பின்னர் வருகை தந்த தலைவர் தொடர்பாக இவ்வாறான நிலைமையொன்று உருவாகவில்லை என்பதால் தற்போது இவ்விடயம் சரி செய்யப்பட்டுள்ளதாக. | முன்னால் தலைவரிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 1982 பெப்ரவரி 05 ஆந் திகதிய 178/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல். | கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு இடையே மரத்துடன் அண்மித்த பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் பூர்த்தி செய்யப்படாத பொருட்களை ஏற்றுமதி செய்தல் போன்ற செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு போதியளவு முறைமை மற்றும் கட்டுப்பாட்டு முறையொன்றை தாபிப்பதற்கு தவறியிருந்தது. | சமர்ப்பித்த பதில் அவதானிப்பிற்கு உரிய பதில் அள்ள. | கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு தேவையான தந்திரேதாபாய திட்டங்களைத் தயாரித்து போதியளவு முறைமையொன்றும் கட்டுப்பாட்டு முறைமையொன்றும் நிறுவப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு.

### 2.1 நிதி விளைவுகள்.

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 315,881,323 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 1,136,211,699 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 820,330,376 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு விற்பனை வருமானம் ரூபா 952,613,427 ஆல் குறைவடைந்தமை ஆண்டின் செலவினம் ரூபா 438,712,744 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2. பிரதான வருமான மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு.

மீளாய்வாண்டிற்கான விற்பனை வருமானங்கள் 16 சதவீதத்தினால் குறைவடைந்திருக்கையில்

விற்பனை விநியோகச் செலவினம் 46 சதவீதத்தினாலும் நிர்வாகச் செலவினம் 14.9 சதவீதத்தினாலும் நிதிச் செலவினம் 6.7 சதவீதத்தினாலும் என மொத்தச் செலவினம் 28 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது. இதன் காரணமாக முன்னைய ஆண்டுடன் 19.9 சதவீத தேறிய இலாப விகிதம் மீளாய்வாண்டில் 6.6 சதவீதம் வரை அதாவது66 சதவீத்தினால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு.

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்.

பின்வரும் அவதானிப்புக்ககள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| யானைகள் அதிகமாக வாழும் பிரதேசம் ஒன்றில் அமைந்துள்ள ஒட்டிசுட்டான் களஞ்சியத்தை மேவுகை செய்யும் வகையில் 2018 ஆம் ஆண்டில் ரூபா 993,751 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் ஆரம்பத்தில் இருந்தே செயற்படுத்தப்படாத மின் வேலியை குறித்த ஒப்பந்தக்காரரரை கொண்டு திருத்தம் செய்வதற்கோ அல்லது ஒப்பந்ததாரருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு முடியாத காரணத்தினால் செலவிடப்பட்ட பணம் விளைவற்றதாக இருந்ததுடன் களஞ்சியம் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு யானைகளால் சேதம் ஏற்படக்கூடிய ஆபத்தொண்டு காணப்பட்டுத. | குறித்த ஒப்பந்தக்காரரால் இச்செயற்பாடு நிறைவேற்றப்படா ததுடன் வேறொரு ஒப்பந்தக்காரரைக் நிறைவேற்றவதற்கும் நிறுத்திவைத்தல் தொகையை விடுவிக்காமல் இருக்கவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளன. | யானை வேலியை திருத்தம் செய்து பெணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மின்சார சபையுடன் யூகலிப்டஸ் வகையிலான மின்கம்பங்களை வழங்குவதற்காக கூட்டுத்தாபனம் அச்சபையுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் நிபந்தனையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் மின்கம்பங்களை வழங்க முடியாமை காரணமாக நாளொன்றுக்கு 0.1 சதவீதம் ஆகக் கூடியது 10 சதவீதத்துக்கு உட்பட்ட தாமத கட்டணம் செலுத்துவதற்கு நேர்ந்திருந்துடன் 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அவ்வாறு செலுத்திய தாமத கட்டணங்கள் ரூபா 8,402,314 தொகை ஊழியர்களின் செயற்திறனின்மை என்ற அடிப்படையில் ஏற்பட்ட நட்டமாக | கட்டளைகளை ஏற்றுக் கொள்ளும் போது கிடைக்கும் இருப்பு மற்றும் மீதமுள்ளவை வருடாந்த உற்பத்தியில் இருந்து வழங்குவதற்கான எதிர்பார்ப்புடன் முன்னைய ஆண்டுகளில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. வனத் தோட்டங்கள் மற்றும் தனியார் வழங்குனர்களிடமிருந்து தரமான நீளக் கம்பங்கள் வழங்குவதில் ஏற்பட்ட பற்றாக்குறை, கட்டளைகளை முடிப்பதில் தாமதத்திற்கு தாக்கமளித்திருந்த போதம் 2017 ஆம் ஆண்டு முதல் | ஒப்பந்த முறையில் மின்கம்பங்களை வழங்கவும், அதிகாரிகளின் செயல்திறனை அதிகரிக்க தேவையான வழிமுறைகளை அறிமுகப்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. | தாமதக் கட்டணம் இல்லாமல் கம்பங்கள் விநியோகம் செய்யப்படுகிறது. | |
| (ஆ) | பூஸ்ஸ தளபாட உற்பத்திசாலைக்கு தேவையான மரங்களை கிழிக்கும் வெஹெரன் இயந்திரம் மற்றும் மெக்வுட் இயந்திரத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் அதில் 47.3 சதவீதம் முதல் 64.2 சதவீதம் வரையான கூடிய பெறுமதியான பலகைகள் விரயம் ஒன்று இடம்பெறுவது அவதானிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை இடம்பெற்று இருந்த பலகை விரயம் 857,940 கன டெசி மீட்டராக இருந்தது. | மரக் குற்றிகளின் நிலைமை மற்றும் வகை அடிப்படையில் இயந்திரம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. கடின மரங்களான கருங்காலி, கும்பம், பாலு, தேனீ போன்றவற்றை உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய woodmac அல்லது பிற இயந்திரங்களால் வெட்டப்படுகின்றன, கழிவுகளின் அளவு குறைவாக இருந்தாலும், மாற்றுவது மிகவும் கடினம் என்பதால், பயன்படுத்தக்கூடிய சிறந்த இயந்திரம் வெஹரன் இயந்திரமாகும். ஆனால் தேக்கு, பலா, சந்தனம் போன்ற மரங்கள் வெஹரன் இயந்திரம் மூலம் மாற்றும்போது அதிக நேரம் எடுப்பதாலும், அதிக விரயத்தினாலும் அதன் மூலம் மாற்றப்படுவதில்லை. கருங்காலி தண்டுகள் பிளவு, வெடிப்பு போன்ற பெரிய குறைபாடுகளால் பொதுவாக வெளியீடு 33 சதவீதமாகவும், வீணாகும் அளவு 66 சதவீதமாகவும் இருப்பதால் அதனை வைத்து விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. | பலகைகளாக மாற்றும் போது கழிவுகளை குறைக்கும் முறைகளைப் பயன்படுத்தக்கூடிய இயந்திரங்கள் மற்றும் முறைமைகளைப் பயன்படுத்த வேண்டும். |
| (இ) | கொமதியகல 01/22 வேலைத் தளத்தில் 2017 ஆம் ஆண்டின் போது இடம்பெற்றிருந்த முறைகேடுகள் தொடர்பாக குற்றச்சாட்டுக்கு உட்படுத்தப்பட்டிருந்த ஊழியர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காமையால் அந்த உத்தியோகத்திற்கு பதவி உயர்வினை வழங்குவதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருந்தது. | இது தொடர்பாக முறையான ஒழுக்காற்று பரிசோதனையொன்று மேற்கொள்ளாமல் விடுவிக்கப்பட்டுள்ளதால் ஒழுக்காற்று பரிசோதனையொன்று மேற்கொள்ளுமாறு பணிப்பாளர் சபை அறிவித்துள்ளது. | முறைகேடுகளை மேற்கொள்வதை தவிர்ப்பதற்காக பலமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று மேற்கொள்வதற்கும் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்ட ஊழியர் தொடர்பாக முறையான ஒழுக்காற்று பரிசோதனையொன்று மேற்கொள்வதற்கும் பதவி உயர்வு வழங்குதலை முறைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பூஸ்ஸ மற்றும் அம்பாறை தொழிற்சாலைகளில் சேரும் இருப்புக்களைக் குறைப்பதற்காக மரப் பலகைகளை அடுக்கி பிரசித்த ஏல விற்பனையில் குறைந்த விலைக்கு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருந்தது அந்த வகையில் 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 1,902,698 பெறுமதியான 49 அட்டித் தொகுதிகள் ரூபா 943,300 இற்கு விற்பனை செய்யப்பட்டு இருந்தமையால் கூட்டுத்தாபனத்திற்கு 959,398 ஆன நட்டம் ஏற்பட்டு இருந்ததுடன் ஏல விற்பனை செய்யப்படாத காணப்பட்ட ரூபா 49,823,171 பெறுமதியான 191 லொட்களின் ஏலவிற்பனை பெறுமதி ரூபா 21,744,180 ஆக இருந்தமையால் குறைந்தது ரூபா 28,078,991 ஆன நட்டமொன்று காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | பிரபல்யம் இல்லாத கேள்வியொன்று இல்லாத உப உற்பத்திகளை சந்தைப்படுத்தும் விலை பட்டியலில் நிலையான விலையில் விற்கப்படாமல் குறைந்த விலையில் விற்கப்படுகின்றன. | இந்த கையிருப்புகளில் பிரபலமற்ற பரிமாணங்கள் மற்றும் பிரபலமான பரிமாணங்கள் தொடர்பான மரங்கள் இருப்பதால், மிகை மரங்களை உரிய விலையில் செயற்திறனாக விற்பனை செய்ய அல்லது ஏலம் விட பொருத்தமான நடைமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தின் குருணாகல் பிரதேச அலுவலகம் மற்றும் மரக் களஞ்சியம் அமைந்துள்ள 0.5033 காணி கொள்வனவுக்காக 1987 ஆம் ஆண்டின் போது மதிப்பிடப்பட்ட ரூபா 400,000 தொகையில் 15 சதவீதம் பிரதேச செயலகத்தில் வைப்பு செய்துவிட்டு அதனைக் கருத்திற் கொள்ளாமல் 15 வருடங்களில் பின்னர் 2002 ஆண்டின் போது அதன் உரிமையாளருக்கு ரூபா 12,000,000 கொடுப்பனவு செய்து காணியை கையேற்பதற்கு பிரதேச செயலாளர் மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலையும் கருத்திற் கொள்ளாமை காரணமாக 2019 ஆம் ஆண்டின் போது மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கு தீர்ப்பின் பிரகாரம் இழப்பீடு மற்றும் சட்ட வட்டியுடன் ரூபா 32,005,946 தொகை பிரதேச செயலாளருக்கு கொடுப்பனவு செய்ய நேர்ந்தது. மேலும் பிரதேச செயலாளரினால் காணியின் உரிமையாளரான கம்பெனிக்கு அதில் ரூபா 24,414,578 மாத்திரம் கொடுப்பனவு செய்து ரூபா 7,591,369 ஆன தொகை நிறுத்தி வைக்கப்பட்டமையால் குறித்த | 2019 ஆம் ஆண்டு மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பின்படி, அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் பிரகாரம், சட்டரீதியான வட்டி தயாரிக்கப்பட்டு, ரூபா 32,005,946 செலுத்தப்பட்டுள்ள போதும் பிரதேச செயலாளரால் நிலத்தின் உரிமையாளர், மெல் கம்பனிக்கு ரூபா 24,414,578 ஐ மாத்திரமே செலுத்தியுள்ளார். எஞ்சிய தொகையை விரைவில் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்துமாறு பி.செ. இற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | குருநாகல் பிரதேச அலுவலகம் அமைந்துள்ள காணியின் உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டியதுடன் கூடுதலாக பிரதேச செயலாளருக்கு செலுத்தப்பட்டிருந்தால், அத்தொகையை மீளப் அறவிடுவதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணியை கூட்டுத்தாபனத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருந்ததன் பேரில் சர்ச்சைக்குரிய விடயம் ஒன்றாக இருந்தது. | | |
| (ஆ) | 2020 ஜனவரி 09 ஆம் திகதி முதல் 2022 மார்ச் 10 வரை கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவரால் பயன்படுத்தப்பட்ட Dell laptop ஒன்று Samsung Tab ஒன்று மற்றும் Samsung Mobile Phone 01 போன்வற்றை கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்காமல் இருந்ததன் காரணமாக அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கணக்கிடப்பட்ட ரூபா 529,199 ஆன சந்தை பெறுமதி மற்றும் மீண்டும் கையேற்பதற்கு செலவிட வேண்டிய செலவினத்தில் 25 சதவீதம் உட்பட மொத்தம் ரூபா 532,949 அறவிடப்பட்டு இருக்கவில்லை. | இதுவரை இப்பொருட்கள் அல்லது அதன் பெறுமதி மற்றும் அவற்றினை வழங்குவதற்கு செலவிட வேண்டிய செலவினத்தில் 25 சதவீதம் உட்பட மொத்தம் ரூபா 532,949 தொகை கூட்டுத்தா பனத்திற்கு கொடுப்பனவு செய்யப்படவில்லையென அறிய தருகின்றேன். | குறித்த சொத்துக்களை கையேற்பதற்கோ அல்லது சந்தை பெறுமதியை அறவிடு வதற்கு ?தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நுவரெலியா மாவட்டத்தில் தளபாட காட்சிக்கூடம் ஒன்றை தாபிக்கும் முன்மொழிவின் பிரகாரம் இரண்டு உத்தியோகத்தர்களுடன் கூடிய குழு ஒன்றின் மூலம் சாத்திய ஆய்வு ஒன்று இல்லாமல் ரிகில்லகஸ்கட நகரம் மற்றும் அங்குள்ள கட்டிடம் ஒன்று பொருத்தமானதென செய்யப்பட்டிருந்த பரிந்துரை அடிப்படையில் அரசின் பெறுகைச் செயற்பாட்டு பின்பற்றப்படாமல் ரூபா 80,000 மாதாந்த வாடகை அடிப்படையில் 2021 மார்ச் முதல் பெற்றுக் கொண்ட கட்டிடம் ஒன்றுக்கு 15 மாதங்களுக்காக ரூபா 1,200,000 ஆன குத்தகை வாடகை செலுத்தி அக்காலப் பகுதியில் ரூபா 9,016,761 நட்டத்தில் நடத்திச் செல்லப்பட்டு 2022 ஜூன் 18 ஆம் திகதி காட்சி கூடம் மூடப்பட்டிருந்தது. காட்சிகூடத்தின் வருமானம் மற்றும் செலவினை அறிக்கை சமர்ப்பிக்கப்படாமையால் இக்காட்சிகூடம் நட்டத்துடன் நடத்திச் செல்லப்பட்டதா என்பதை முன்னதாகவே இனங்கான முடியாமல் இருந்தது. | குழு அளித்த பரிந்துரைகள் மற்றும் கௌரவ அமைச்சரின் அறிவுறுத்தலின் பிரகாரம், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் காட்சியறை தொடங்கப்பட்டது. காட்சியறை நட்டத்தில் இயங்குவது தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு விடயங்கள் அளிக்கப்பட்டு.2022.06.18 ஆந் திகதி காட்சியறையை மூடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு புதிய. | புதிய செயற் திட்டத்தைத் தொடங்குவதற்கு முன், அம் முன்மொழிவு குறித்து முறையான சாத்தியவள ஆய்வு நடத்தப்பட்டு, அதன் செயற்திறனைச் சரிபார்த்து, பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் கணக்கு வைத்தல் சரியான நேரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | வருடாந்த விற்பனை தேவைப்படின் அடிப்படையில் உற்பத்தி தேவைப்பாடு எதிர்வுகூறல் சிறந்த இருப்பு கட்டுப்பாட்டு முறையை பின்பற்றி முறையான மற்றும் போதிய அளவு களஞ்சியத்தை பேணுதல் செயற்திறனான உற்பத்தி செயற்பாட்டை நிறுவுதல் போன்ற விடயங்கள் தொடர்பாக உயர்மட்ட முகாமைத்துவ கவனம் செலுத்தாத காரணத்தினால் 2012 ஆம் ஆண்டு முதல் 2022 ஜூலை 31 | அதிக கேள்வியுள்ள சந்தைப்படுத்தல் திட்டம் தொடர்பான தளபாடங் களையே தற்போது உற்பத்தி செய்யப்படுவதால் எதிர்காலத்தில் இந்த நிலை ஏற்படாது. விற்பனைத் துறையிடம் இருந்து வரும் கட்டளைகளின் அடிப்படையில் இதுவரை | வருடாந்த விற்பனைத் தேவைகள் அடிப்படையில் உற்பத்தி எதிர்வுகூறல் முறையான மற்றும் போதுமான களஞ்சியங்களைப் பராமரித்தல் மற்றும் |

| | | |
|---|---|---|
| ஆம் திகதி வரை உற்பத்தி செய்யப்பட்ட ரூபா 68,239,793 கிரயத்திலான மிகை தளபாட இருப்பொன்றும் 2022 ஆம் ஆண்டில் எவ்வித விற்பனை ஒன்றும் மேற்கொள்ளப்படவிருந்த ரூபா 7,152,896 பெறுமதியான 32 தளபாட உருப்படிகளும் மிகவும் மெதுவாக விற்பனை செய்யப்படும் ரூபா 3,132,100 பெறுமதியான 12 தளபாட உருப்படிகளும் 2012 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை உற்பத்தி செய்யப்பட்ட போதும் ஒப்பம் இடப்படாத ரூபா 20,474,207 பெறுமதியான தளபாடங்கள் என்றும் பூஸ்ஸ காட்சியகத்தின் களஞ்சியத்திலும் தொழிற்சாலைகளிலும் காணப்பட்டன. | ஒப்பம் செய்யப்படாமல் இருந்த தளபாடங்கள் ஒப்பமிடப்பட்டு காட்சியறைக்கு வழங்கப்பட்டு வருகிறது. | திறமையான உற்பத்தி செயல்முறையை நிறுவுதல் போன்ற விடயங்கள் தொடர்பாக உயர் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வன குற்றவியல் இலக்கங்கள் அல்லது வனத்தில் இருந்து வழங்கும் அறிவித்தல் பத்திர இலக்கம் ஒன்று அல்லது வேறு எழுத்து மூலம் சாட்சி இல்லாத ரூபா 3,420,427 பெறுமதியான 2570 துண்டுகளை உள்ளடக்கும் குற்றச் செயலாக கிழிக்கப்பட்ட 35 மர இருப்பு (Lot) விளைவற்ற வகையில் கெப்பட்டிபொல களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | விற்பனை துறைக்கு தகவல் தெரிவிக்காததால், இந்த மரம் விற்பனை தொடர்பான நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. உடனடியாக தகவல் கொண்டு வந்து, அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கவும், வெட்டப்பட்ட மரங்கள் குறித்து தெரிவிக்காதது குறித்து உரிய அதிகாரிகளிடம் விசாரித்து நடவடிக்கை எடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | ஒவ்வொரு களஞ்சியத்திலும் உள்ள குற்றவியல் மரங்கள் தொடர்பான தகவல்கள் உடனடியாகப் பெறப்பட்டு, அம் பலகைளை நீதிச் சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களின்படி கைதவிர்ப்பதற்கு , நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பொரலந்த களஞ்சியத்தில் 2019 ஆம் ஆண்டு முதல் செயலற்று காணப்படும் வெஹெரொன அரி இயந்திரத்தை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் 04 சுற்று அடி வளை மேற்பரப்பு குற்றிகளை கிழிப்பது செயலிழக்கப்பட்டமையால் அச்செயற்பாடு CHAIN SAW இயந்திரத்தின் மூலம் மேற்கொண்டு காணப்பட்டமை யால் மரங்களை அறுப்பதில் விரயம், கூடிய பெறுமதி ஒன்றை எடுப்பதாக அவதானிக்கப்பட்டது. | 2004 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த வெஹரன் இயந்திரத்தை தயாரித்த கம்பனி தற்போது புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய ஏனைய வெட்டும் இயந்திரங்களை தயாரிக்கும் பக்கம் திரும்பியுள்ளதால் பழுது பார்ப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. ஆனால் மரம் வெட்டுவதன் ஒட்டுமொத்த செயலாற்றலை கருத்தில் கொண்டு, இந்தச் சூழ்நிலையில் 4 அடிக்கு மேல் உள்ள மரக் குற்றிகளை சங்கில அரிவாள் பயன்படுத்தி வுட்மைசர் இயந்திர்ததின் மூலம் மாற்றல் இடம் பெறுவதுடன் இவ்வாறான | இயந்திரங்களின் செயற்பாடு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு சரியான நேரத்தில் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு மற்றும் பிற பயனுள்ள மாற்று வழிகளைப் பயன்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சந்தர்ப்பத்தில் ஏற்றுக்கொள்ளக் கூடிய முறையாகும். | |
| (இ) | முல்லைத்தீவு பிராந்திய வன அலுவலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் 40 ஹெக்டேயர் அளவிலான முறிப்பு தேக்கு செய்கையை முழுமையாக வெட்டுவதற்காக 2021 நவம்பர் மாதம் அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டு இருந்ததுடன் அதன் வேலை பூர்த்தி செய்யப்பட்டு 2022 ஆகஸ்ட் 31 ஆம் திகதி அளவில் மீண்டும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு கையளிக்க வேண்டியிருந்தது எவ்வாறாயினும் வெட்டி முடிவடையாமை, குற்றிகள் இலக்கம் இடப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்மை, சரியான தரவுகள் உள்ளடக்கப் படாமல் ஆவணங்கள் நாளது வரையாக்கப்படாமல் இருந்தமை விளைச்சல் குறைத்து பதிவேடுகளை உட்படுத்தப்பட்டமை, அறிவித்தல் பத்திர இலக்கங்கள் மற்றும் குற்றி இலக்கங்கள் வேறுபடுத்தபட்டிருந்தமையால் வெட்டப்பட வேண்டிய மரங்கள் ஆங்காங்கே வைக்கப்பட்டு இருந்தமை போன்ற பல்வேறு முறைகேடுகள் காரணமாக 2023 மே 16 ஆம் திகதி வரையிலும் 02 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக காலம் கடந்து இருந்த போதும் அதன் வேலை பூர்த்தி செய்வதற்கு கூட்டுத்தாபனம் தவறி விழுந்தது. | முறிப்பு வேலைத்தளத்தில் நடந்த முறைகேடுகள் காரணமாக, தற்போது உதவி முகாமையாளர் மற்றும் வேலைத்தள அலுவலர் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதுடன் நீக்கம் செய்யப்பட்டு புலனாய்வு மற்றும் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது, வேலைத்தளங்களில் பணிகள் நிறைவடைந்துள்ளது, விசாரணைக்கு பின், அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என, தெரிவித்துக் கொள்கிறேன். | முறைகேடுகள் தொடர்பான ஒழுக்காற்று விசாரணைகள் முறையாக நடத்தப்பட்டு அதன் செயன் முன்னேற்றம் குறித்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் இது போன்ற முறைகேடுகள் மீண்டும் நடக்காமல் இருக்க உள்ளகக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் உருவாக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கூட்டுத்தாபனத்தினால் தளபாட உற்பத்திக்காக எடுக்கப்படும் உழைப்பு மணித்தியாலம் மதிப்பீடு செய்யப்பட்டு இருந்த போதும் உள்ளவராக செலவிடப்பட்ட உழைப்பும் மணித்தியாலங்களுடன் ஒப்பிட்டு உழைப்பாளிகளின் செயற்திறன் மற்றும் வினைத்திறனை அளவிடுவதற்கு நடைமுறை ஒன்று தயாரிக்கப்படாமை காரணமாக உழைப்பாளிகளின் செயற்திறன் மற்றும் வினைத்திறனை ஈடுபடுத்தியதாக உறுதிப்படுத்த முடியாது | உற்பத்தி வரிசை (production line) மேற்கொள்ளப்படும் போது, ஒவ்வொரு பணியாளரும் செய்த வேலையை அளவிட்டு பதிவு செய்யுமாறு தொழிற்சாலைகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ள போதும் சில சந்தர்ப்பங்களில் அது செயறபடுத்தப்படவில்லை என்பதால் பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு முறைமை ஒன்றை தயாரிப்பதற்கு குழவொன்று | பணியாளர்களின் செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறனை அளவிடுவதற்கு ஒரு முறை உருவாக்கப்பட்டு தளபாடங்களை உற்பத்தி செய்வதற்கு எடுக்கப்படும் உண்மையான உழைப்பு மணித்தியாலத்தின் அடிப்படையில் தளபாடங்களின் கிரயத்தைக் கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும. |

| | | | |
|---|---|---|---|
| | இருந்தது. | நியமிக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | பூஸ்ஸ தொழிற்சாலைத் தொகுதியின் தளபாடங்கள் உற்பத்தி குறுகிய வேலை உடன்படிக்கை அடிப்படையில் வெளி ஒப்பந்தகாரர் ஒருவர் மூலம் நிறைவேற்றப்பட்டது அதற்காக 2013 ஆம் ஆண்டு முதல் 2022 மார்ச் வரையான காலப்பகுதியில் 69 ஒப்பந்ததாரர்களுக்கு ரூபா 10,322,050 பகுதித் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது எவ்வாறாயினும் குறித்த செயற்பாடுகளுடன் உடன்படிக்கை காலத்தில் பூர்த்தி செய்வதற்கு முகாமைத்துவம் தவறிய காரணத்தினால் சில செயற்பாடுகளுக்காக மீண்டும் விலை கோருவதற்கும் கூட்டுத்தாபன ஊழியர்களைக் கொண்டு நிறைவேற்றுவதற்கும் இருந்தமையால் அதிக காலமொன்றும் மேலதிக கிரயமொன்றைச் செலவிடுவதற்கு நேர்ந்தமை அவதானிக்கப்பட்டது. | பூஸ்ஸ பிரிவில் பாரம்பரிய தளபாடங்கள் உற்பத்திக்கு ஒப்பந்த அடிப்படையில் தச்சர்களால் செய்யப்படும் வேலையின் பகுதியின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட ஒரு சதவீதம் வழங்கப்படுகிறது. ஒப்பந்த காலத்திற்குள் முடிக்கப்படாத பகுதிகளை முடிக்கவும், புதிதாக விலை விபரங்களை அழைத்து புதிய ஒப்பந்ததாரர்களுக்கு வழங்குவதற்கும், சில சமயங்களில் கூட்டுத்தாபன ஊழியர்களைக் கொண்டு மீதமுள்ள பகுதிகளை செய்து முடிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்ததாரர்களைக் கொண்டு தளபாடங்களைத் தயாரிக்கும் போது ஒப்பந்த காலத்துக்குள் குறித்த பணிகளை முடிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (ஊ) | பூஸ்ஸ தொழிற்சாலையின் இயலுமை உடன் கூடிய பொருத்தமான ஒப்பந்தகாரர்களுக்கு ஒப்பந்தம் கையளிக்காமை மற்றும் தொழிற்சாலையின் முறையற்ற திட்டமிடல் காரணமாக 01 ஆண்டு முதல் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் நடைமுறை வேலைகளில் பெறுமதி ரூபா 21,689,756 ஆக இருந்ததுடன் காலத்துக்குரிய தேவைப்பாடு இணங்காமல் மற்றும் விற்பனை நடவடிக்கைகளை மேம்படுத்தாமை காரணமாக 2022 ஜூலை 31 இல் உள்ளவாறு பயன்படுத்தாமல் காணப்படும் இருப்பின் பெறுமதி ரூபா 65.5 மில்லியனாக இருந்தது. | தற்போது, பகுதியளவு தயாரிக்கப்பட்ட தளபாடங்களை விரைவாக உற்பத்தியை முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால், எதிர்காலத்தில் இந்த நிலை ஏற்படாமல் தடுக்கும் வகையில் உற்பத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நடைமுறை வேலைகளை விரைவில் முடித்து விற்பனை செய்வதற்கும், தேவையை கண்டறிந்து, உற்பத்தி பணிகளை திட்டமிட்டு, திறமையுடைய தகுந்த ஒப்பந்ததாரர்களிடம் ஒப்பந்தங்களை ஒப்படைப்பதற்கும் , விற்பனை செயற்பாடுகளை ஊக்குவித்து, உற்பத்தியை செயற்திறனான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (எ) | அம்பாறை அரிமரத் தொழிற்சாலையில் 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான | தொப்பிகல வேலைத்தளத்தில் இருந்து பெறப்படும் குற்றிகளில் தோட்டாத் துண்டுகள் மற்றும் இரும்புத் | பலகையாக மாற்றும் போது உயர் விளைச்சளை பெற்றுக்கொள்ளக்கூடிய |

| | | | |
|---|---|---|---|
| | காலப்பகுதியில் பலகைகளாக மாற்றுவதற்காக கொண்டு வரப்பட்டிருந்த மரங்களின் அளவு 3,512,926 கன டெசி மீட்டர் ஆக இருந்ததுடன் முடிவுப் பொருளாக பெற்ற பலகைகளின் அளவு 1,806,397 கன டெசி மீட்டராக இருந்தமையால் பலகையாக மாற்றும் போது இடம்பெற்றிருந்த விரயம் 1,706,529 கன டெசி மீற்றராக அதாவது 49 சதவீதம் ஆக இருந்தது. சில செயற்பாடுகளுக்காக தேவைப்பாட்டை மிகைத்து 32 சதவீதம் கூடுதலாக 454,496 கன டெசீ மீட்டர் அளவிலான பலகை வழங்கப்பட்டிருந்ததாகவும் அரியப்பட்ட ரூபா 295,712,614 பெறுமதியான 3,718,422 கன டெசி மீற்றர் அளவிலான பாரிய பலகை இருப்பொன்று செயற்திறனான பயன்பாட்டிற்கு பொருத்தமான வேலை திட்டம் ஒன்று இல்லாமையால் குவிக்க வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | துண்டுகள் பொதுவாக காணப்பட்டதால், குற்றிகளில் சுமார் 1.2 அங்குல அளவில் இழையம் காணப்பட்டதால் கட்டளை விவரக் குறிப்புகளுக்கு ஏற்ப குறைபாடுகள் நீக்கப்பட்டு, தளபாடங்கள் தயாரிக்கப்பட்டு, ஒழுங்கற்ற முறையில் மாற்றப்பட்டு பல்வேறு குறைபாடுகள் நீக்கப்பட்டு நல்ல பலகைகளின் அளவு தளபாடங்கள் உற்பத்திக்காக அனுப்பும் சந்தர்ப்பங்கள் காணப்படுவதன் பிரகாரம் வீணாகும் விகிதம் அதிகமான பெறுமதியை எடுக்கின்றது. எதிர்கால கட்டளைகளை எதிர்பார்த்து மரங்கள் மாற்றப்பட்டு பதப்படுத்தப்பட்டு சில இருப்புக்கள் அளவொன்று பராமரிக்கப்படுகின்றன. | நுட்ப முறைமையில், மரக்கழிவுகளைத் தடுக்கவும், உற்பத்தி செயற்திறனாக அதிகரிக்கவும் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் பொருத்தும் வேலை பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 98,476,655 முடிவு பெறுமதியான பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட 6,133 பொருள் உருப்படிகள் பூர்த்தி செய்வது மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் காரணமாக அம்பாறை தொழிற்சாலையில் எஞ்சிய உற்பத்திகளை களஞ்சியப்படுத்தும் சிக்கல்களுக்கு முகங் கொடுத்திருந்தது. | ஊழியர்கள் பற்றாக்குறையால் இயந்திர பொருத்தும் வேகத்தில் ஒப்பம் இடும் வேலை செய்ய முடியாமை இதற்கான காரணமாகும். அம்பாறை தொழிற்சாலையின் மறுசீரமைப்புத் திட்டத்தின் பிரகாரம், பகுதியளவு முடிக்கப்பட்ட பொருட்களை கல்தெமுல்ல தொழிற்சாலைக்கு எடுத்துச் சென்று பொருத்தி, ஒப்பமிட்டு விற்பனை செய்யும் முறைமையொன்று நிறுவப்பட்டு வருகிறது. | தற்போதுள்ள பிரச்சனைகளுக்கு உரிய தீர்வு காணப்பட்டு, பகுதியளவு முடிக்கப்பட்ட பொருட்களை பூர்த்தி செய்து விற்பனை செய்ய வேண்டும். |
| (ஐ) | Finger Joint தளபாட உற்பத்தி கூட்டுத்தாபன ஊழியர்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்பட்ட போதும் அந்த ஊழியர்களின் செயற்திறன் மற்றும் வினைத்திறனை மதிப்பிடுவதற்காக முறையான கட்டுப்பாட்டு நடைமுறையை நிருபிக்காமை காரணமாக இடம்பெறும் செயற்திறனின்மை அடிப்படையில் கட்டளைகளை உரிய காலத்தில் பூர்த்தி | இதுவரை Finger Joint பிரிவிற்கான அனைத்து கட்டளைகளும் முடிந்துவிட்டன. அம்பாறை தொழிற்சாலையில் 1,050 board உற்பத்தி இடை நிறுத்தப்பட்டு, அதற்கு பதிலாக காட்சியறைகள் மூலம் விற்பனை செய்யக்கூடிய தளபாடங்களை உற்பத்தி செய்வதற்கு இந்த பலகைகள் பயன்படுத்தப் பட்டன. பெறப்பட்ட | Finger Joint தளபாடங்களை கட்டளைகளின் பேரில் மாத்திரம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் ஏற்கனவே உள்ள உற்பத்திகளை விரைவில் பூர்த்தி செய்து விற்பனை செய்ய தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்ய முடியாதிருந்ததுடன் 1,050 போட்களுக்கான கட்டளை இரத்துச் செய்யப்பட்டிருந்தது மேலும் Finger Joint போட் உதவியுடன் பூர்த்தி செய்யப்பட்ட தளபாடங்களின் விற்பனையும் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. | கட்டளைகளின் அடிப்படையில் மாத்திரமே Finger Joint உற்பத்தி செய்யப்படுகிறது. | |
| (ஒ) | வன குற்றங்கள் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக 2018 ஒக்டோபர் 10 ஆந் திகதி 422 ஆம் இலக்க நீதிச் சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றாமல் அம்பாறை தொழிற்சாலையில் 2019 ஆண்டுக்கு முன்னர் இருந்து வரும் ரூபா 1,219,620 பெறுமதியான 16,088 கன டெசிமீட்டர் ஆன வன குற்ற கிழிக்கப்பட்ட பலகைகள் மற்றும் ரூபா 1,932,541 பெறுமதியான 158,274 கன டெசி மீட்டர் அளவான வன குற்ற மரக் குற்றிகள் இருப்பொன்று காணப்பட்டது. | காணப்பட்ட பலகைகளின் ஒரு பகுதி நீதிமன்றங்களுடன் தொடர்புபட்டு விடுவிக்கப்பட்டுள்ளதுடன், மீதமுள்ள அளவை விடுவிப்பதற்கான தேவையான நடவடிக்கைகள் பிராந்திய முகாமையாளரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாற்றத்திற்காக உரிய அளவு மரங்கள் சேமிக்கப்பட்டு எஞ்சிய மரங்கள் விற்பனைக்காக அம்பாறை களஞ்சியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | வனக் குற்றவியல் மரம் தொடர்பாக, ஆணைக்குழு சுற்றறிக்கையில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, மரத்திற்கு ஏற்படும் சேதத்தைக் குறைத்து, உற்பத்தி நோக்கங்களுக்காக அல்லது விற்பனைக்கு பயன்படுத்த வேண்டும். |

## 3.5 சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்.

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2006 இன் அரச பெறுகை வழிகாட்டி கோவையின் 6.2.2 வழிகாட்டலின் பிரகாரம் மட்டுப்படுத்தப்பட்ட தேசிய விலைகோரல் ஆகக் குறைந்தது 21 நாட்கள் கேள்விக் காலம் ஒன்று வழங்கப்பட வேண்டிய போதிலும் குருநாகல் பொல்பித்திகம கிராம பிட்டுவில் 6 ஹெக்டேயர் 01/008 C வேலை தளத்தில் 1720 தேக்கு மரங்களை வெட்டுவது தொடர்பாக 03 சந்தர்ப்பங்களில் கேள்வி கோரி 02 சந்தர்ப்பங்களில் நிர்ணயிக்கப்பட்ட காலத்தை விட குறைந்த கேள்வி காலம் வழங்கப்பட்டிருந்ததுடன் முதலாவது கேள்வி கோரலின் போது தெரிவு செய்யப்பட்டிருந்த போதும் உடன்படிக்கை செய்யப்படாத கேள்விதாரருக்கு மூன்றாவது கேள்வி கோரலின் போது அதுவரை அகற்றப்பட்டிருந்த 290 மரங்களுடன் | இது தொடர்பான விசாரணைகளுக்குரிய கோப்புகள் அனைத்தும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கான பதில்களை பெற முடியாத நிலையில் உள்ளதுடன் லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்கு சென்ற கணக்காய்வு விசாரணைக்கு உரிய தகவல்கள் மற்றும் தேவையான தகவல்களின் நிழற்பட பிரதிகளைப் பெற்று எனக்கு சமர்ப்பிக்குமாறு பிராந்திய முகாமையாளருக்கு (குருநாகல்) தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2006 இன் அரச பெறுகை வழிகாட்டி கோவையின் வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து ஏற்படக்கூடிய முறைகேடுளைத் தவிர்ப்பதற்கு பலமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை தாபிக்க வேண்டும். |

மொத்த மரம் அளவையும் அகற்றுவதற்கு ஒப்பந்தம் வழங்கியிருந்தமை சர்ச்சைக்குரிய விடயம் ஒன்றாக அவதானிக்கப்பட்டது.

### 3.6 பெறுகை முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டல் கோவையில் 2.7.7, 2.8.5, 2,11.3 மற்றும் 6.3.1 (அ) ஆகிய வழிகாட்டலுக்கு முரணாக முறையான பெறுகை குழுவொன்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஒன்று நியமிக்கப்படாமல் பெக்ஸ் மூலம் விலை கோரி இருந்த 03 சந்தர்ப்பங்களில் பூஸ்ஸ தொழிற்சாலை தொகுதிக்கு ரூபா 1,101,875 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | பூஸ்ஸ தொகுதியில் முத்திரையிடப்பட்ட விலைப் பட்டியல்களை திறப்பதற்கும், பெறுகை குழு பணிகளுக்கும் தனித்தனியாக இரு குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் படி, பெறுகைப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மிக அவசர கொள்வனவுகளுக்கு தொலைநகல் மூலம் முத்திரையிடப்பட்ட விலைகளைப் பெற வேண்டியிருந்ததுடன் எதிர் காலத்தில் இதை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.7 மனித வளங்கள் முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பயிற்சிகளுக்காக உத்தியோகத்தர்களை தெரிவு செய்யும்போது திட்டவட்டமான கொள்கை ஒன்று பின்பற்றப்படாமை காரணமாக ஒரே தரப்பினரை மாத்திரம் ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு பயிற்சி பாடநெறிகளுக்காக பங்குபற்றச் செய்திருந்ததன் காரணமாக கூட்டு தாபனத்தின் ஊழியர்களின் அறிவு மற்றும் திறன் இயலளவு அபிவிருத்தி செயற்பாடு முறையாக இடம்பெறவில்லையென அவதானிக்கப்பட்டது. | மூன்று பிரிவுகளின் கீழ் பயிற்சிக்கு, அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கும் வகையில் ஆண்டின் தொடக்கத்தில் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் தேவையான பயிற்சி வழங்கப்படும். வருடத்தில், நிறுவனத்தின் சேவைத் தேவைகளின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட பயிற்சிக்காகவும் பணியாளர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. | பயிற்சிக்கான உத்தியோகத்தர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முறையான மற்றும் குறிப்பிட்ட கொள்கை உருவாக்கப்பட வேண்டும் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளித்தல் கட்டாயமாக்கப்பட வேண்டும். |